செ.வெ.எண்: 350 நாள்: 02.06.2020

**சூரிய கூடார உலர்த்தி அமைக்க விவசாயிகளுக்கு அரசு மானியம்**

அறுவடை செய்த விளைப்பொருட்களை புதிய தொழில்நுட்பத்துடன் உலர்த்தி சந்தைபடுத்துவதற்காக தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக சூரிய கூடார உலர்த்தி (Solar Drier) 60 சதவீத மானியத்தில் அமைத்து தரப்படுகிறது.

விவசாயிகள் சூரிய கூடார உலர்த்தி மூலம் விளைப்பொருட்களை உலர்த்தினால் விரைவில் உலர்ந்து விளைப் பொருட்களின் தரம் உயர்ந்து மதிப்பு கூடுகிறது. இக்கூடாரம் அமைப்பதால் காற்று, மழை போன்ற இயற்கை இடர்பாடுகளினால் பொருட்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

400 சதுர அடி முதல் 1000 சதுர அடி வரை சூரிய கூடார உலர்த்தி அமைக்கும் பட்சத்தில், சிறு, குறு, ஆதிதிராவிடர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு அதிகபட்சமாக ரூ.3.50 லட்சம் வரையிலும் இதர விவசாயிகளுக்கு ரூ.3.00 லட்சம் வரையிலும் மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் தஞ்சாவூர் கோட்டத்தை சார்ந்த விவசாயிகள் திரு.க.குமணன், உதவி செயற்பொறியாளர் (வே.பொ), தஞ்சாவூர் அவர்களை 9443489403 என்ற எண்ணிலும், கும்பகோணம் கோட்டத்தை சார்ந்த விவசாயிகள் திரு.லெ.அய்யப்பன், உதவி செயற்பொறியாளர் (வே.பொ), கும்பகோணம் அவர்களை 63838 30644 என்ற எண்ணிலும், பட்டுக்கோட்டை கோட்டத்தை சார்ந்த விவசாயிகள் திரு.சி.எழிலன், உதவி செயற்பொறியாளர் (வே.பொ), பட்டுக்கோட்டை அவர்களை 94436 78621 என்ற எண்ணிலும், மேலும் கூடுதல் விவரங்களுக்கு திரு.H.N.கான், செயற்பொறியாளர் (வே.பொ), தஞ்சாவூர் அவர்களை 94433 98633 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.